மாண்புமிகு திரு. க. இராசாராம் : கோத்தகிரியிலே ஒரு "வியூ பாயின்ட்" கட்ட $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாயிலே காரியம் நடந்து வருகிறது. அதே போல், குன்னூரிலே 12 குடில்கள் பிரயாணிகள் தங்குவதற்காக $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : உதகமண்டல நகரத்தை இன்னும் விரிவு படுத்த இந்த அரசு மேற்கொண்டிருக்கும் சிறப்பான நடவடிக்கை களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகமண்டலத்தைப் பொறுத்த வரையில் மற்ற வட நாட்டு கோடை வாசஸ்தலங்களுக்கு இல்லாத ஒரு பெரிய சிறப்பு இருக்கிறது. இந்தியாவில் இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களிலே பல வருஷம் பூராவும் பனியாலே மூடப்பட்டு இருக்கின்றன. இங்கே அப்படி இல்லை. ஏறக்குறைய வருஷத்திலே 10 மாத காலம் சுற்றுலா பயணிகள் சென்று உதகையிலே தங்கிட எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கிறது. இவைகளைப் பற்றிய விளம்பரங்களை எல்லாம் இந்த அரசு செய்து வருகிறது. அதற்காக தனி போஸ்டர்களையும், ஒரு புத்தகத்தையும் கூட வெளியிட்டு, அவைகள் எல்லா இடங்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டன. செப்டம்பர் மாதத்திலே கூட சில காரியங்களைச் செய்யலாம் என்று இந்த அரசு எண்ணியிருக்கிறது. கோடை காலத்திலே உதக மண்டலத்திற்கு வரும் பயணிகளை அதிகமாக கவர்ந்து ஈர்க்க வேண்டும் என்பதற்காக கோடையிலே நாடக விழா போன்றவற்றை வைத்து "கோடை விழா" ஒன்றை ஏற்பாடு செய்து, ஒரு தொகையை செலவு செய்யத் தயாராக இருக்கிறது. அதோடு இல்லாமல் அங்கே இருக்கின்ற கூட்டுறவு சங்கத்தின் மூலமாக பஸ் ஒன்றை ஏற்பாடு செய்து, ஏழை மக்களும், மற்றவர்களும் முதுமலைக்காடு வரை போய் வர வழி வகைகளை செய்திருக்கிறது.

திரு. எம். தேவராசன் : உதகமண்டலத்தை விரிவுபடுத்தியும், அழகுபடுத்தியும் வரும் இந்த அரசாங்கம், கோடை கால சட்ட மன்ற கூட்டங்களை அங்கே நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது அரசினுடைய கொள்கை விளக்கம் பற்றிய கேள்வி ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வியாகும் இது.

Facilities for visitors to Kodaikanal.

* 412 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether this Government has any proposal to improve the facilities for the visitors to Kodaikanal during summer; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம். போதிய அளவு தங்குவதற்கான இடவசதிகள் அளிப்பது பற்றி அரசிடம் ஒரு செயற் குறிப்பு இருந்துவருகிறது.

(இ) இத்திட்டம் பற்றி முடிவு செய்ய தேவையான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்தை ஏற்று நடத்தும்.

1971 சூலை 23]

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister whether any concrete proposals to provide convenience to the visitors also have been made? For instance, even though there is electricity there is frequent failure of electricity. That is supposed to be one of the reasons which deters many people from going and settling down there, even though it is the second best hill station in Tamil Nadu. Taking all these factors into consideration, will this Government prepare a sort of a Master Plan and to solve the problem immediately construct a few tenements or tourist bungalows or some buildings for tourists, if necessary, buildings for middle class, upper middle class and lower middle class people and see that these sort of pinpricks are avoided there?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, அங்கே அடிக்கடி மின்சாரம் தட்டுப்பட்டு போகிறது என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதை மின்சார இலாகா விடம் சொல்லி, அப்படிப்பட்ட குறைபாடுகள் நேராத வகையிலே முயற்சிகள் கைக்கொள்ளப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஊட்டியிலே இருக்கும் "தமிழகம்" மாதிரி, கோடைக்கானலிலேயும் நல்ல ஒரு கட்டிடத்தைக் கட்டி, பல கமிட்டிகள் ஊட்டியிலே நடப்பது மாதிரி இங்கேயும் நடக்க அரசாங்கம் வசதி செய்யுமா? காரணம், ஊட்டியிலே இருக்கும் "தமிழகத்திலே" இடம் கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஆகவே, இதை அங்கே கோடை காலத்திலே பரிசீலிக்க அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கொடைக்கானலிலே கமிட்டிகளை கூட்டுவதிலே ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஆனல், உதகையைத் தான் அதிகமாக எல்லோரும் விரும்புகிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : கொடைக்கானலிலே ஒரு பெரிய ஏரி இருக்கிறது. வடக்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலமான காஷ்மீரிலே இருக்கின்ற ஏரி அளவுக்கு இங்கேயும் ஏரிகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே இருப்பது போன்று இங்கேயும் படகு வீடுகள் கட்டி விடுவதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா. இதை " டூரிஸ்ட் அன்ட் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் " மூலமாகச் செய்ய வேண்டும். மற்றபடி, மத்திய அரசு வடக்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களுக்கு கொடுக்கும் விளம்பரங்களை போல் தெற்கே இருக்கும் கோடை வாசஸ்தலங்களுக்கு கொடுப்பதில்லை. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், வடக்கே இருக்கும் கோடை வாசஸ்தலங்கள் வருஷத்திலே பல நாட்கள் பனியால் மூடிக் கிடக்கின்றன. ஆனல், தெற்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களிலே 10 மாதம் பனியே இல்லாமல் நல்ல முறையிலே இருக்கின்றன. எனவே, அந்த முறையிலே வடக்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களைவிட நம்முடைய கோடை வாசஸ்தலங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாக இருந்தும், மத்திய அரசு தகுந்த முறையிலே இதற்கு விளம்பரங்கள் செய்யப்படுவதில்லை. ஆகவே, தமிழக அரசு மத்திய அரசுக்கு இவைகளை எடுத்துக் கூறி, நல்ல முறையிலே விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கொடைக்கானலை விருத்தி செய்வதிலே இந்த அரசு கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். கொடைக்கானல் ஏரியிலே படகு வீடுகள் கட்டிவிடுவது பற்றி அரசின் கவனத்திலே இருக்கிறது. நம் கோடை வாசஸ்தலங்களுக்கு போதிய விளம்பரம் இல்லை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அந்த விளம்பரத்திற்கான ஏற்பாடுகளை விரைவிலேயே இந்த அரசு மத்திய அரசோடு கலந்து ஆவன செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: இங்கே புதிதாக திருமணம் ஆகிற இளம் தம்பதிகள் தங்களுடைய தேன் நிலவிற்காக காஷ்மீருக்கும், சிம்லாவுக்கும் போகிறார்கள். ஏனென்று கேட்டால், தமிழகத்திலே இருக்கிற கோடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களிலே தங்குவதற்கு "அவுஸ் போட்டுகளோ", ஓடி ஆடி விளையாட சிறந்த பூங்காக்களோ, இரவில் தங்க நல்ல ஓட்டல் வசதிகளோ இல்லை என்று சொல்லுகிறார்கள். அத்தகைய வசதிகளை எல்லாம் ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அத்தனை ஏற்பாடுகளும் இங்கே இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் எடுத்த சினிமா படத்திலே கூட இது எல்லாம் இருக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தப் பெரிய ஏரியை டெவலப் செய்ய வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி பரிந்துரை வழங்கப்பட்டிருக்கிறது. அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

(2) நடைமுறைக் கேள்வி

வினாக்களுக்கான விடைகளை விரைவுபடுத்துவது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், இந்த பேரவையில் வருகின்ற சில கேள்விகள் ஒரு மாதத்திற்கு முன்னதாகக் கொடுக்கப்பட்டு, அவைகளுக்கு பதில்கள் அப்போது தயார் செய்யப்பட்டிருக்கின்றன. வருகின்ற பதில்கள் எல்லாம் அப்-டு-டேட் ஆக இருக்கிறதா என்பதற்கு விளக்கம்தர வேண்டும். தொழில் அமைச்சர் அவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்னதாக உள்ள கேள்விக்கு அப்போதுள்ள பதிலைத்தான் சொன்னார்கள். ஆகவே, கேள்வி–பதில்கள் கொடுக்கின்ற நிலையில் குழப்பம் காணப்படுகிறது, தலைவர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தக் குளறுபடியும் காணப்படவில்லை. நம் எண்ணங்களில்தான் குளறுபடி இல்லாமல் இருக்க வேண்டும்.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]